# புலிகளுக்கு ஒரு விலை கொடுப்பதன் மூலமே நாடு பிளவுபடுவதை தடுக்கமுடியும்- தொண்டமான் கூறுகிறார்


விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 பங்குனி 20 இதழ் 52
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 02 — 04 — 1992


(புதுடில்லி)
''புலிகள் நாட்டைப் பிளக்கும் முயற்சியைக் கைவிட வேண்டுமென்றால் அதற்கு நாம் ஒரு விலை கொடுத்தாக வேண்டும். தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் அந்த விலை அதிகரித்துச் செல்கிறது.
இவ்வாறு அமைச்சர் தொண்டமான் 'இந்தியா டுடே' சஞ்சிகைக்குத் தெரி

(4-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நடக்கும் இடங்களில் தாக்குதல் நிறுத்தம்!

(கொழும்பு)
வடபகுதியில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சை நடைபெறும் பகுதிகளில், படையினர் 'தாக்குதல் நிறுத்தம்' செய்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.
எனினும் இப்பகுதிகளில்

(4ம் பக்கம் பார்க்க

## பாதயாத்திரை பெரும் வெற்றியாம்

(கொழும்பு)
கடந்த பதினெட்டு நாட்களாக நடைபெற்ற பாதயாத்திரை பெரும் வெற்றி என்றும் அரசுக்கு எதிர்ப்பு காட்ட மக்கள் அஞ்சவில்லை என்பதை இந்த பாதயாத்திரை எடுத்து காட்டுவதாகவும் பாதயாத்திரை அமைப்

(4ம் பக்கம் பார்க்க)

# ★ மட்டக்களப்பில் நேற்று இரு பொலிஸ்நிலையங்கள் மீது புலிகள் அதிரடித் தாக்குதல்

## 9 பொலிஸார் படுகாயம்

(மட்டக்களப்பு)
**மட்டக்களப்பு பகுதியில் வாழைச்சேனை, காத்தான்குடி பொலிஸ் நிலையங்கள் மீது நேற்று அதிகாலையில் விடுதலைப் புலிகள் ஒரே நேரத்தில் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதல்களில் பொலிஸாருக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தை அதிகாலையில் முற்றுகையிட்ட புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டதில் ஒரு உதவிப் பொலிஸ் பரிசோதகரும், எட்டு கான்ஸ்டபிள்களும் படுகாயம் அடைந்தனர். கட்டடத்திற்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.

இதேவேளை படகுகள் மூலம் கடல் வழியாக வந்த மற்றும் ஓர் புலிகள் அணி, காத்தான்குடிப் பொலிஸ்நிலையம் மீது பலத்த தாக்குதலை மேற்கொண்டதில் பொலிஸாருக்குப் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

இவ்விரு தாக்குதல்களிலும் சுமார் 300 புலிகள் பங்குபற்றி இருக்கவேண்டுமெனப் பாதுகாப்பு வட்டாரங்கள தெரிவித்துள்ளன. (மா-சி)

## கிழக்கில் படையினருக்கு பெரும் அதிர்ச்சி

(கொழும்பு)
மட்டக்களப்பில் நேற்று புலிகள் மேற்கொண்ட அதிரடித் தாக்குதல் படையினருக்குப் பெரும் அதிர்ச்சியையும் அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

மட்டக்களப்பில் புலிகளின் பலம் அடக்கப்பட்டுவிட்டதா

(4-ம் பக்கம் பார்க்க)

## முல்லையில் தாக்குதல் நடத்திய பீரங்கிபடகுகள் துரத்தியடிப்பு

[முல்லைத்தீவு]
முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் கடற்பகுதியில் தாக்குதல் நடத்திக்கொண்டிருந்த ஸ்ரீலங்காப் படையினரின் 4 பீரங்கிப் படகுகள் மீது விடுதலைப் புலிகளின் 'விசேட படை அணியினர்' அதிரடித் தாக்குதலை நடத்தி, பீரங்கிப் படகுகளைத் துரத்தியடித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான 45 நிமிட நேர தாக்குதலையடுத்து மேற்படி 4 பீரங்கிப் படகுகளும் அவ்விடத்தைவிட்டு திரும்பி விட்டன,

பொதுமக்களின் குடியிருப்புகள் மீது 4 பீரங்கிப் படகுகளும்தாக்குதல் மேற்கொண்டதையடுத்தே விடுதலைப் புலி

(4-ம் பக்கம் பார்க்க)

## தங்கபாளங்களை கடத்தியவர் கைது

(கொழும்பு)
19 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த 30 தங்கப்பாளங்களை நாட்டிற்குள் கடத்திவர முயன்ற ஜப்பானியப் பிரஜை ஒருவரை சுங்கத்திணைக்கள

[4ம் பக்கம் பார்க்க]

## பகல் நேர மின்வெட்டு கொழும்பில் நெருக்கடி

(கொழும்பு)
கொழும்பு மாநகரில்நேற்று ஆரம்பமான பகல் நேர மின் வெட்டைத் தொடர்ந்து, கொழும்பு மாநகர் பெருமளவில் பாதிப்படைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மின்வெட்டினால் தெரு வாகன சமிக்ஞைகள் இயங்கவில்லை எனவும், பொலிசாரே வாகனங்களை ஒழுங்குபடுத்தும் வேலையில் ஈடுபடுத்தப் பட்டதாகவும், இதன் காரணமாக வாகன நெரிசல் பெருமளவில் இடம்பெற்றதாகவும் கூறப்படுகின்றது.

தொழிற்சாலை வேலைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது: (மா)

## பஞ்சாப் குண்டு வெடிப்பில் பொலிஸ் அதிகாரி பலி

[புதுடில்லி)
பஞ்சாப்பில் லூர்தியானு மாவட்டத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற சக்திவாய்ந்த குண்டுவெடிப்பில் சிக்கி பொலிஸ் சுப்பிரின்டன் அவர் மகள் உட்பட ஏழு பேர் கொல்லப்பட்டனர்.

மேற்படி குண்டிவெடிப்பை

(4ம் பக்கம் பார்க்க)

## இல. மத்திய வங்கி ஆளுநர் ராஜினமா செய்யும் நிலையில்

(கொழும்பு)
இலங்கை மத்திய வங்கி ஆளுநர் நாயகம் நெவில் கருணதிலக தனது பதவியிலிருந்து ராஜினமா செய்ய வேண்டியநிலையில் இருப்பதாக தெரிவிக்சப் படுகிறது.

ஆளுநர் நெவில்கருணதிலக இலங்கை மத்திய வங்கிக்கு தேவையான தங்கத்தை பொதுச்சந்தை விலையிலும் பார்க்க கூடுதலான விலைக்கு வாங்கியதாக அவர் மீது குற்

(4- ம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்தம்; பேச்சுவார்த்தை ராஜதந்திரிகள் கோரிக்கை

(கொழும்பு)
புத்தாண்டை முன்னிட்டாவது அரசும், புலிகளும் யுத்த நிறுத்தம் செய்து, பேச்சு வார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டும் எனக் கொழும்பில் உள்ள சில வெளிநாட்டு ராஜ தந்திரிகள் கோரியுள்ளனர்.

முதலில் ஏற்படும் யுத்த நிறுத்தம் மூலமே இப்பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும். இதனை இரண்டு தரப்பும் கவனத்தில் கொள்ளவேண்டும் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

அண்மைக்காலமாகச் சர்வதேச ரீதியிலும், உள்நாட்டிலிருந்தும் யுத்த நிறுத்தம், பேச்சுவார்த்தை போன்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## 94 நோயாளர் இன்று பயணம்

(யாழ்ப்பாணம்)
பருத்தித்துறை துறை முகத்தில் தங்கி நிற்கும் குமண சப்பலில் யாழ். பொதுமருத்துவ மனையில் தெரிவு செய்யப்பட்ட 94 நோயாளர்கள் கொழும்பு

(4ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

சிற்றிசன் பெண்கள் கைக் கடிகாரம் பரியோவான் கல்லூரிக்கு அருகாமையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். பரியோவான் கல்லூரி அலுவவகத்தில் ஒப்படைக்கவும். (சி-6108)

முக்கியமான கையேட்டுப் பதிவுப் புத்தகம் 30-ந் திகதி காலை சிவலிங்கப்புளிடிக்கும் ஐந்துசந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஸ்பெசல் இஞ்சினியரிங் வேர்க்ஸ், முட்டாசுக் கடைச்சந்தி, யாழ்ப்பாணத்தில் அல்லது 21, சிவலிங்கப் புளியடி வீதி, ஒட்டுமடம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (சி-6111)

### விற்பனைக்கு

கோவில்களுக்குத் தேவையான சிங்கவாகனம் விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். ந. தருமராசா (M. G R.) 198, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [சி-6112]

### ஆண்டு 5, 4

புலமைப் பரிசு. 91, 92, 93 கணிதம் மீட்டல் 90 புள்ளிகள் பெறுவதற்குக் கற்பிக்கப்படும். ஆசிரியர் B. Sc 85, சிவன் கோவிலடி, திருநெல்வேலி, (சி-6113)

# மலையகத்தைக் குழப்ப தீய சக்திகள் முயற்சி

(கொழும்பு)

''நாம் அரசியல் ரீதியில் உருவாவதை விரும்பாத தீய சக்திகளே மலையகத்தில் அமைதியை குழப்ப முயல்கின்றன',

இவ்வாறு கிராமிய கைத்தொழில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

மலையகத்திலும் புலிகள் என்றுகூறி தேடுதலிலும் இளைஞர்களை கைதுசெய்வதிலும் சிலர் முனைகின்றனர். மலையகத்தில் அரசியல் ரீதியில் முன்னேற்றம் காணப்படுகின்றது. இதைக் குழப்ப பலர் முயல்கின்றனர் என்றும் அவர் கூறினார். (கே)

# தெரிவுக் குழுவினர் யாழ். செல்லவேண்டும்

[கொழும்பு]

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணும் முயற்சியில் பௌத்த குருமார் ஈடுபட்டுள்ள இவ்வேளையில் விடுதலைப்புலிகளும் அரசும் இணைந்து வடக்கு - கிழக்கில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்த முயலவேண்டும்.

இவ்வாறு கூட்டணியினர் கோரியுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில்,

நாடாளுமன்ற தெரிவுக் குழுவினரை யாழ்ப்பாணம் வருமாறு விடுதலைப்புலிகள் அழைப்பு விடுத்துள்ளனர். விடுதலைப்புலிகளின் அழைப்பை ஏற்று நாடாளுமன்ற தெரிவுக் குழுவினர் யாழ்ப்பாணம் சென்று நிலைமைகளை நேரில் அவதானிக்கவேண்டும்.

நாட்டில் நிலவும் அமைதியின்மையை நீக்க சமயப் பெரியார்கள் முயற்சித்துள்ள இவ்வேளையில் அனைத்து மக்களும் நிரந்தர சமாதானத்திற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக்கொண்டனர். [க]

### 9-ம் திகதி சம்பளம்

(மானிப்பாய்)

அரச ஊழியர்களின் ஏப்ரல் மாதத்திற்குரியசம்பளம் எதிர் வரும் 9ம் திகதி வியாழக்கிழமை வழங்குமாறு திறைசேரியிருந்து அனுப்பிவைக்கப் பட்டுள்ள சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ், சிங்கள புத்தாண்டு தினத்தை சிறப்பாகக் கொண்டாடு முகமாகவே இச்சலுகை வழங்கப்பட்டுள்ளதாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (71]

# பஸ் விபத்தில் 40 பேர் உயிரிழப்பு

(புதுடில்லி)

இந்தியாவில் அருணசலப் பிரதேசத்தில் வீதியில் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் ஒன்று அருகில் உள்ள பள்ளத்தில் வீழ்ந்ததினால் 40 பேர் ஸ்தலத்தில் கொல்லப்பட்டதோடு 24 பேர் படுகாயமடைந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் பஞ்சாப் அமிர்தசரசில் குண்டுவெடிப்பில் 14 பேர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

### சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கட்டுடை அருள்மிகு ஞான வைரவர் தேவஸ்தானத்தில் நாளை வெள்ளிக்கிழமை சங்காபிஷேகம் சிறப்பாக நடைபெற ஏற்பாடாகுயுள்ளது.

### மார்ச் மாத ஒய்வூதியம்

(மானிப்பாய்)

மார்ச் மாதத்திற்குரிய ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் யாழ். செயலகத்திலிருந்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக செயலக ஓய்வூதியப் பிரிவினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பர்மா, மலேஷியா, சிங்கப்பூர் ஓய்வூதியம் பெறுபவர்களின் ஒய்வூதிய வவுச்சர்களும் காசோலைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (71)

### சித்திரத்தேர் வெள்ளோட்டம்

(முல்லைத்தீவு)

தண்ணீரூற்று ஊற்றங்கரை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான சிற்பத்தேர் வெள்ளோட்டவிழா 4-ந் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3-09 முதல் 4-39 வரை இடம்பெறவுள்ளது. (சு)

# ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குமாறு வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள ஆசிரியர்கள், அதிபர்களுக்கு இன்றுவரை சம்பளம் வழங்கப்படவில்லை ஆனால் பணிப்பாளர் உட்படசகலமாவட்ட, கோட்டக்கல்வி அலுவலக ஊழியர்கள் வரை சகலருக்கும் சம்பளம் வழங்கப்பட்டுள்ளமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

திணைக்களம் இவ்வாறு பாகுபாடு காட்டுவது வருந்தத் தக்கது எனவும், மேலும் தாமதமில்லாது சம்பளம் வழங்க நடவடிக்கைஎடுக்குமாறும் திணைக்களத்தை பொதுச் செயலாளர் வலியுறுத்தியுள்ளார்.

### படுகாயம்

[யாழ்ப்பாணம்]

மிருக வேட்டைக்கெனக் கட்டுத் துவக்குத் தயாரித்து இயக்க முற்படுகையில் தவறுதலாக துவக்கு வெடித்த சம்பவத்தில் இடதுகை படுகாயப்பட்ட நிலையில் ஒருவர் யாழ். பொது மருத்து வசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை தர்மக்கேணியைச் சேர்ந்த நல்லையா பாலசிங்கம் [வயது-42] என்பவரே படுகாயமுற்றவராவார் (56]

### 4ம் ஆண்டு நினைவு விழா

(யாழ்ப்பாணம்)

சுவாமி சாந்தானந்தாவின் பிறந்த தினவிழாவும் இராமகிருஷ்ணலய நுண்கலைக் கல்லூரியின் 4ம் ஆண்டு நிறைவு விழாவும் 7ம் திகதி செவ்வாக்கிழமை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் உள்ள இராமகிருஷ்ணலயத்தில் நடைபெற உள்ளது.

சுவாமி சித்ருபானந்தா தலைமை வகிக்க பேராசிரியர் கா. சிவத்தம்பி பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

பரிசில் வழங்கலும் 'ஆனந்த மேடை' இசையரங்கு நிகழ்ச்சியும் இடம்பெற இருக்கிறது. (சு)

# திட்ட உத்தியோகத்தர்களுக்கு விரைவில் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

திட்டம் செயல்ப்படுத்தும் உத்தியோகஸ்தர்கள் விரைவில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர்களாக பதவி உயர்வு பெறவுள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் திட்டம் செயல்படுத்தும் உத்தியோகஸ்தர்களாக தற்போது பணியாற்றிவரும் 25 பேரும் விரைவில் உதவி திட்டமிடல் பணிப்பாளராக பதவிஉயர்வு பெற்று உதவி அரச பணிமனைகளில் பணியாற்றவிருப்பதாகவும், இவர்களின் பதவிஉயர்வு பற்றிய அத்தாட்சிப்படிவங்களை தற்போது கொழும்பிலிருக்கும் யாழ். அரச அதிபர் யாழ். நகருக்கு திரும்பி வரும்போது கொண்டு வருவார் என்று யாழ் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

### தொண்டர் சேவை

(மானிப்பாய்)

மானிப்பாய் மருதடி விநாயகர் தொண்டர் குழுவினர் இவ் ஆலய உற்சவத்தையொட்டி வழமைபோல் இம்முறையும் சிறந்த முறையில் சேவையாற்றி வருகின்றனர்.

மானிப்பாய் கொத்தணியைச்சேர்ந்த 10 பாடசாலை மாணவ மாணவிகள் இதில் கலந்து கொண்டு மிகவும் சிறந்த முறையில் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை சேவையாற்றி வருவதை காணக்கூடியதாகவுள்ளது. (71)

# மழை பெய்யும் சாத்தியம் இல்லை

(கொழும்பு)

இம்மாத முடிவு வரை மழையை எதிர்பார்க்க முடியாது என கொழும்பு வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

மழை சிறிதளவும் இல்லாததால் தேயிலை உற்பத்திபாதிக்கப்பட்டுள்ளதோடு, மின் வெட்டும் அமுலுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தகது.

மேலும் அதிகரித்த வெப்பத்தால் நாடு முழுவதிலும் தொற்று நோய்கள் தீவிரமாக பரவிவருகின்றன. (கே)

## இராசிபலன்

**2/04/1992**

**வியாழக்கிழமை**

**(தமிழுக்கு பங்குனி 20)**

சதுர்த்தசி மு. ப, 10.26 வரை; உத்தரட்டாதி பி. இ. 4.47 வரை; சித்தயோகம்; இராகுகாலம் பகல் 1.10முதல் 3.10 வரை சுபநேரம் காலை 7.40 முதல் 9.10 வரை.

மேடம்: எதிர்பாராத செலவு, அலைந்துதிரிதல், சினம்.

இடபம்: பணப்புளக்கம், தொழில்மேன்மை வெற்றி.

மிதுனம்: பெரியோர் அறிவுரை, கடன்வரவு, மகிழ்ச்சி.

கடகம்: தொழில் குறைவு முன்கோபம், யோசனை.

சிங்கம்: இனசனபகைபணச் சிக்கல். உடல் உபாதை.

கன்னி: போட்டிகளில் வெற்றி, பிரச்னைகளுக்குதீர்வு. புகழ்.

துலாம். குடும்பசுகம். புத்திரர் பெருமை காரியசித்தி.

விருச்சிகம்: ஏமாற்றம் துன்பம், தொழில் நஷ்டம்.

தனுசு: பகைமை உணர்வு, மனப்போராட்டம், வேதனை.

மகரம்: பெண்உதவி பயணம், மனமகிழ்ச்சி.

கும்பம்: குடும்பப்பிரிவு, தனிமையடைதல், வீண் விரயம்.

மீனம்: தாய்வழி உறவு. தெய்வீக செலவு அமைதி.

-ஜோஸ்யர்

### வலைப்பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி திரு வீடியோ ஆதரவில் திருநாமம் வெற்றிக் கிண்ணத்துக்காக வதிரி டயமன்ட்ஸ் வி. க. நடாத்தும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி வதிரி டயமன்ட்ஸ் மைதானத்தில் எதிர்வரும் 7ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

வடமராட்சியில் முன்னணி வகிக்கும் பத்து கழகங்கள் இச்சுற்றுப்போட்டியில் கலந்து கொள்கின்றன. போட்டிக்கான ஏற்பாடுகளை டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டுத்துறை செயலாளர் திரு. கி. தர்மேந்திரா மேற்கொண்டு வருகின்றார்.

### உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டவிளையாட்டு அபிவிருத்திக்குழு நடாத்தும் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இன்றைய ஆட்டம்.

திருமலை நட்சத்திரங்கள் அணியை எதிர்த்து கிராம முன்னேற்றசங்கஅணிமோதும் இப்போட்டி இன்று பி. ப. 3 மணிக்கு சுன்ணகம் ஸ்கந்தாவில் நடைபெறும்.


## தொழிற்பயிற்சிகள்

★ **மோட்டசைசிக்கிள் மெக்கானிசம்**

சகல நீர் இறைக்கும் இயந்திரம், மோட்டார் சைசிக்கிள் திருத்துதல் ஆரம்பத்தில் இருந்து பயிற்சிபளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ **றீவைண்டிங்**

மின் மோட்டார், டைனமோ, ரான்ஸ்போமர், மற்றும் எலக்றிக்கல் உபகரணம் றிவைண்டிங் செய்தல் பயிற்சியளிக்கப்படும்.
காலம்: 4 மாதம்

★ **எலெக்ரிக்கல் வயறிங்**

வீட்டு மின்சாரவேலை, மின்சார பொருள்கள் திருத்துதல் பயிற்சியளிக்கப்படுகின்றன.
காலம்: 2 மாதம்

**பயிற்சிகள் ஆரம்பம்: 04-04-92**

**JAFFNA TECHNICAL INSTITUTE**

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[றெயில்வே கடவை அருகாமை]

(எ 2051)


# அமைச்சர் மன்சூர் யாழ். மாணவர் சந்திப்பு

(மாத்தளை)

மாத்தளையில் நடைபெற்ற மகாபொல வைபவத்தில் கலந்துகொள்ளச்சென்ற யாழ் மாணவர்களை சந்தித்த வர்த்தக வாணிப அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொண்டார்.

யாழ் மாணவர் எவ்வளவு சிரமத்தின் மத்தியில் கல்வியை கற்கிறார்கள் என்பதை மாணவர்க்ள் விளக்கிக் கூறினர்.

இம்முறை 325 யாழ் மாணவர்கள் மகாபொல புலமைப் பரிசில் பெற மாத்தளை சென்றிருந்தனர். (கே)

# யாழ். மாவட்டத்தில் 10 வருட இராணுவ நடவடிக்கையில் 11,500பேர் பலி; 5,875 மரணமே பதிவிலுள்ளது

## புவியியற்துறை விரிவுரையாளர் உரை

(யாழ்ப்பாணம்)

1980க்குக் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட இழப்புக்களில் இந்தியப் படை இலங்கையில் இருந்தபோது ஏற்பட்ட இழப்புகள் அநேகமானவை பதியப்படவில்லை.''

இவ்வாறு ''வடபிரதேசத்தில் அண்மைக்கால இழப்புகளும், அவற்றிற்கான காரணிகளும்'' என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழக புவியியல் துறை மண்டபத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கா. குகபாலன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: இறப்புகளை பரிமட்டான இறப்பு, குழந்தை இறப்பு, வேற்றுமை இறப்பு, என மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

ஒரு நாட்டின் இறப்பு விகிதம் கூடுதலாக இருந்தால் பொருளாதார அபிவிருத்திக் குறைவுற்ற நாடுகளாகக் கருதலாம். ஆனுல் வளர்முக நாடுகளில் ஒப்பீட்டளவில் பார்க்கும்போது இது இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தில் இறப்பு விகிதம் குறைவாக ஏற்படுகிறது, இதற்கு வேறு சில காரணிகளும் உண்டு.

1757 ம் ஆண்டு இறப்பு, பிறப்பு கட்டாயம் பதியப்படவேண்டும் என்ற சட்டம் இயற்றியபொழுதும் 1940ம் ஆண்டு காலப்பகுதி வரை இப்பதிவுகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை.

1981ம் ஆண்டு தொடக்கம் 1990 வரை யாழ்ப்பாணப் பதிவாளர் பிரிவிலும், வடமராட்சிப் பதிவாளர் பிரிவிலும் 43,941 பேரின் இறப்புகள் பதியப்பட்டுள்ளன.

இந்த இறப்புப் பதிவுகள் பதிவதற்குப் பதிவாளர்களுக்குக் கொடுக்கப்பட்ட வேதனங்களும் ஒரு குறைபாடாகும். இறப்பு விபரம் பதிந்தால் 3 ரூபாவும், பிறப்புப் பதிவு பதிந்தால் 5ரூபாவும் விவாகப்பதிவானுல் ஒரு ரூபாவும் வழங்கப்பட்டன.

யாழ். மாவட்டத்தில் கூடுதலான இறப்புக்கள் வயோதிபம். இயற்கை மரணங்களால் ஏற்பட்டுள்ளது. இதனுல் 1981 தொடக்கம் 1990 வரையுள்ள காலத்தில் 9,297 இறப்புக்கள் பதியப்பட்டுள்ளன.

துப்பாக்கி, எறிகணை, குண்டு வீச்சினுல் 5,875 பேர் இறந்துள்ளதாகப் பதியப்பட்டுள்ளது. 1970 ம் ஆண்டு குறைவாக இருந்த இந்தக் காரணி 1980ல் வேகம் கொண்டு 1981-90 காலத்தில் யாழ். மாவட்டத்தில் இந்த இறப்பு 13.4 வீதமாக உயர்ந்துள்ளது. இந்த நிலைக்குச் சில காரணங்கள் அமைந்துள்ளன.

1980 தொடக்கம் 87 வரையுள்ள காலத்தில் சிங்கள இராணுவம் ஏற்படுத்திய இறப்புக்கள்

1987–1990 இல் இந்திய அமைதிப் படையால் ஏற்படுத்தப்பட்ட இறப்புக்கள்—

1990 ம் ஆண்டு இலங்கை இராணுவத்தினரின் அழிப்புகளில் பெருமளவு பதிவு செய்யப்படாமலும் இருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் 1981-1990 வரை எறிகணை வீச்சு, துப்பாக்கி, குண்டு வீச்சுகளால் 11,500 பேர் இறந்துள்ளார்கள். இவர்களில் 5,875 பேரின் இறப்புக்கள்தான் பதியப்பட்டிருக்கின்றது. இந்திய அமைதிப்படை இலங்கையில் இருக்கும் காலத்தில் மற்றக் காலங்களிலும் பார்க்க மிகக் கூடுதலாக 82.6 வீத இறப்புக்கள் ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்கொலை போன்ற சம்பவங்கள்- மனவிரக்தி, பலவந்தம் போன்ற சம்பவங்களால் ஏற்பட்டன. இது யாழ். மாவட்டத்தில் 1981 - 1984 காலப்பகுதியில் ஒரு லட்சம் பேருக்கு 42 பேர் என்றளவில் இருந்தது.

இந்தத் தற்கொலை நாளாவட்டத்தில் குறைந்துவிடுகின்றது. மாணவர்கள் கல்வியில் அக்கறையின்மை, வெளிநாட்டுக்குச் சென்றமை, பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிப்பதில் குறைவு, பிள்ளைகள் தாம் விரும்பியதைச் செய்தமையால் இத் தற்கொலைகள் குறைவாக இருந்தன.

இந்தப் பத்து ஆண்டுகளில் 446 கொலைகள் நடந்துள்ளன. குழந்தைகள் இறப்பு இந்தக் காலப் பகுதியில் 4,978 இறப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மொத்தத்தில் இக்காலப் பகுதியில் ஆண்களே கூடுதலாக இறந்துள்ளனர். அவர்களது சராசரி இறப்பு வயது 70 ஆகும். பெண்களுக்கு 77 ஆகும்.

ஆய்வாளரின் கருத்துக்குப் பின்பு பார்வையாளர் கருத்துத் தெரிவிக்கையில்,

அநேக இறப்புக்கள் இயற்கை மரணமாக இருந்தும் அவர்கள் வன்செயலால் இறந்துள்ளதாகப் பதியப்பட்டு நிவாரணம் பெற்றுர்கள் என்றும்—

அநேகபதிவாளர்கள், தான் தோன்றித்தனமான நடவடிக்கையினுல் இறப்புக்கள் உண்மைக்கு புறம்பாக பதியப்பட்டுள்ளதென்றும்—

இறக்காதவர்கள்கூட இறந்துவிட்டதாக பதியப்பட்டு நிவாரணம் பெற்றுள்ளார்கள் என்றும் இதனுல் பதிவுகள் பிழையாக இருக்கிறபடியால் வேறு கோணத்தில் வைத்து ஆராயப்பட வேண்டுமென்றும் கூறினர்கள். (சு)

## கோயம்புத்தூர் பகுதியில் படைகள் குவிப்பு

(சென்னை)

விடுதலைப் புலிகளின் தற்கொலைப்படையினர் தமிழகத்தில் ஊடுவியிருப்பதாகக் கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து கோயம்புத்தூரில் விசேடபொலிஸ்பிரிவு அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்படையினர் இரவு பகலாக சேவையில் ஈடுபட்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க)

## லிபியாவிற்கு எதிராக தடை ஐ. நா. சபையில் தீர்மானம்

[நியூயோர்க்]

லிபியாவுக்கு எதிராக வர்த்தகத் தடை நடவடிக்கையையும் ஆயுதத்தடை ஒன்றையும் விதிப்பது என்று கூறப்படும் தீர்மானத்திற்கு ஆதரவாக நேற்றுமுன்தினம் ஐ. நா. பந்தோபஸ்து சபை வாக்களித்தது.

இத்தீர்மானத்திற்கு ஆதரவாக 10 நாடுகள் வாக்களித்தன. சீனு, மொரொக்கோ, இந்தியா, சிம்பாப்வே, கெப்பார்வே ஆகிய 5 நாடுகள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.

விமானக்குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பான பூர்வாங்க விசாரணை நடவடிக்கைகளில் ஒத்துழைப்பதற்கு திரிப்பொலி தவறிவிட்டதன் காரணமாக இந்தநடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அமெரிக்கா, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய மூன்று நாடுகளும் இத்தீர்மானத்தை கொண்டு வந்தன.

பயங்கரவாதத்தை லிபியா முற்றிலுமாக கைவிட்டுவிட வேண்டும் என்றும், விமானத்தைக் குண்டுவைத்து தகர்த்ததென குற்றஞ்சாட்டப்பட்ட லிபிய பிரஜைகள் இருவரையும் லிபியா அடுத்த மாதம்15-ம் திகதிக்குள் ஒப்படைத்துவிட வேண்டும் என்றும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (கே)

விசர்நாய்கடி

## தடுப்பு மருந்துகளை அனுப்ப கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

''விசர்நாய்க்கடியால் பாதிக்கப்படும் யாழ். மாவட்டத்து மக்களை மரணத்தின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்கு தேவையான விசர்நாய் கடி தடுப்பு மருந்துகளை உடனடியாக யாழ்ப்பாணத்துக்கு அனுப்பும்படி அரசாங்கத்தை கோரவேண்டுமென நேற்று அரச சார்பற்ற நிறுவனங்கள் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் நடத்திய ''விசர் நாய்க் கடியும் - பாதிப்பும்'' என்னும் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது.

யாழ். மாவட்ட மக்கள் தாம் வளர்க்கும் நாய்களுக்கு தடுப்பு ஊசி போட்டு, வீட்டில் கட்டிவளர்க்கவேண்டும் என்றும், தற்போதைய நிலையை சமாளிப்பதற்கு தேவையான விசர்நாய்த் தடுப்பு மருந்து வகைகளை இங்கு கொண்டுவருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உதவி புரியவேண்டும் என்றும் இக்கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டது. (வி)

## ஓய்வூதிய கொடுப்பனவுகள் பிரதேச மட்டத்திற்கு விரிவு

(கொழும்பு)

ஓய்வூதியக் கொடுப்பனவுகள் சம்பந்தமான நடவடிக்கைகளை கச்சேரி மட்டத்திலிருந்து பிரதேச செயலக மட்டத்துக்கு விரிவு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாக ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

ஓய்வூதியத் திணைக்களத்திலும், கச்சேரிகளிலும் ஓய்வூதியம் வழங்குவதில் ஊழல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (சி)

## வயிற்றுக்குள் விழுங்கி போதைவஸ்து கடத்த முற்பட்டவர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைவஸ்தை வயிற்றுக்குள்விழுங்கி இலங்கைக்குள் கடத்திவர முற்பட்ட இந்தியப் பிரஜை ஒருவர் கட்டுநாயக்கா விமான நிலைய அதிகாரிகளிடம் வசமாக மாட்டிக்கொண்டார்.

சென்னையிலிருந்து கட்டுநாயக்கா வந்த இந்திய பிரஜை ஒருவர் 230 கிறும் ஹெரோயின் போதைவஸ்தை 65 சிறியவில்லைகளாக தயாரித்து வயிற்றுக்குள் விழுங்கி, நாட்டுக்குள் கடத்த முற்பட்டபோது, கைதுசெய்யப்பட்டு, விமானப்படை வைத்திய அதிகாரிகளின் உதவியுடன் மேற்படி போதை வஸ்துகள் மீட்கப்பட்டன.

போதைவஸ்தை வயிற்றுக்குள் விழுங்கி கடத்த முற்பட்டது இதுவே முதல் தடவையென சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (வி)

## வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வல்லை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் நாளை வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. 10ம் திகதி வேட்டைத் திருவிழாவும் 13ம் திகதி வசந்தோற்சவமும், 16ம் திகதி தேர்த்திருவிழாவும் 17ம் திகதி தீர்த்தோற்சவமும் 20ம் திகதி பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறும்.

## விசேட கருமபீடம்

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடங்களில் நடைபெற்றதைப் போல் இவ் வருடமும் மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய உற்சவ காலத்தின்போது இலங்கை வங்கி மானிப்பாய் கிளையின் விசேட கருமபீடம் ஒன்று ஆலய முன்றலில் கடந்த மாதம் 28ம் திகதி முதல் இயங்குகின்றது.

இக்கருமபீடத்தில் சிறுவர் சேமிப்பு கணக்குகள் திறத்தல் மற்றும் சேமிப்பு சான்றிதழ் விற்பனை முதலிய சேவைகள் நடைபெறும். (71)

## வெடிச்சத்தங்களால் கொழும்பில் பதற்றம்

(கொழும்பு)

கொழும்பின் முக்கிய சில பகுதிகளில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாரிய வெடிச் சத்தங்களால் கொழும்பு நகர் மீண்டும் அல்லோல கல்லோலப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில தினங்களுக்கு முன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையப்பகுதியில் இருபாரிய வெடிச்சத்தங்கள் கேட்டதையடுத்து மக்கள் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டனர். எனினும் விமான நிலையத்திலும் சுற்றுப்புறத்திலும் பல மணி நேரம் பெரும் பதற்றம் நிலவியதாம்.

இதேவேளை கடந்த வியாழக்கிழமை கல்கிசை, தெகிவளை பகுதிகளிலும் இவ்வாறான பாரிய சத்தங்கள் கேட்டதாகவும் பின்னர் படையினர் அப்பகுதிகளுக்கு சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## ஒரு சில நிமிடங்களில் பிறப்புச் சான்றிதழ்கள்

(கொழும்பு)

பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இனி ஒரு சில நிமிடங்களில் கிடைக்கும் என பொது நிர்வாக மாகாணசபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அறிவித்துள்ளது.

அடுத்த சில மாதங்களில் மேற்படி அமைச்சு கம்பியூட்டர் மயப்படுத்தப்படவுள்ளதையடுத்தே பிறப்பு அத்தாட்சிப்பத்திரங்கள் ஒரு சில நிமிட நேரத்தில் கிடைக்கும் வாய்ப்பு ஏற்படவுள்ளது.

இதுவரைகாலமும் இப்பத்திரங்களைபெற 3-4 மாதங்கள் காத்திருக்கவேண்டியிருந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

## தவக்கால நற்சிந்தனை

நாம் கடவுளை ஏற்றுக்கொளாது, அவர் தரும் மகிமையை நாடாது, ஒருவருக்கொருவர் தரும் மகிமையைத் தேடிக்கொள்வதில் நாட்டம் காட்டுகின்ருேம். இதனைவிடுத்து கடவுளன்பினை தேடுவதிலும், விசுவாசத்தில் உறுதிகொள்வதிலும் முன்னிற்போம்.

(மா. தாசீசியஸ்

# ஆயுதங்களை போடும் வரை புலிகளுடன் பேச முடியாது

## இராணுவ அதிகாரி கூறுகிறார்

(கொழும்பு)

"யாழ்ப்பாணம் செல்வோரிடம் பேச்சுவார்த்தை பற்றிப் பேசிப் பயனில்லை, புலிகள் சமாதானத்தை விரும்பினால் ஆயுதங்களைக் கீழே வைக்கட்டும்"

இவ்வாறு சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கொழும்பில் நேற்றுமுன்தினம் கூறினார். அவர் மேலும் கூறியதாவது:

கொழும்பிலிருந்து யாழ். செல்பவர்களிடம் தாம் பேச்சுவார்த்தையை விரும்புவதாகக் கூறி புலிகள் காலம் கடத்தும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். உண்மையாகவே புலிகள் சமாதானத்தை விரும்பினால் ஆயுதங்களைக் கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு வரட்டும்.

சில மத குழுக்கள் அல்லது வேறு குழுக்கள் யாழ்ப்பாணத்துக்குச் சென்று திரும்பிவந்து புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான கடைசிச் சந்தர்ப்பம் இதுவாகுமென்று யோசனை தெரிவிக்கலாம். அப்படி யோசனை கூறுவதால் என்ன பயனுண்டு.

புலிகள் வீணே காலம் கடத்துகின்றனர். ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு நாங்கள் அவர்களைக் கேட்கிறோம். புலிகள் இதற்கு ஒருபோதும் இணங்காது, ஆயுதங்களை வைத்துக்கொண்டு இடைக்கால நிர்வாகத்தையும், தேர்தலையும் நடத்த விரும்புகின்றனர் என்றார். (கே)

## தொழிற்சாலைகளுக்கு மூலப்பொருட்கள்கிடைக்கும்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் மூலப் பொருட்கள் இல்லாமல் தடைப்பட்டிருந்த தொழிற்சாலைகளை மீண்டும் இயங்க வைப்பதற்கு யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பில் முயற்சிகள் மேற்கொண்டுள்ளார்.

இதன் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் தடைபட்டிருந்த சவர்க்கார தொழிற்சாலைகளுக்கும் கைத்தறி நூல்நிலையங்களுக்கும் வேண்டிய மூலப்பொருட்களை கப்பல் மூலம் அனுப்புவதற்கு அரசு தற்போது ஒப்புக் கொண்டுள்ளது.

இதேவேளை, பருத்தித்துறை துறைமுகத்தின் கட்டிட வேலைகளை திருத்தம் செய்வதற்கு 200 சிமெந்துபைக்கறுகளையும், யாழ். மாவட்டத்திலுள்ள சைவ கோவில்களுக்கு வர்ணம் பூசுவதற்கு தேவையான பெயின்ட் வகைகளையும் அனுப்பிவைப்பதற்கு அரசு சம்மதம் தெரிவித்துள்ளது. (வி)

## க. பொ. த. பரீட்சை சுமுகமாய் நடைபெற்றது

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். மாவட்டத்தில் ஆரம்பமாகிய கல்விப் பொதுத்தராதர உயர்தர விசேட பரீட்சை 1991 சுமூகமாக நடைபெற்றதாக யாழ். கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்துள்ளார்.

இப் பரீட்சை முழுவதும் சுமுகமாக நடந்து முடிவதற்கு சகலரது ஒத்துழைப்பையும் அவர் கோரியுள்ளார். (சு)

## துறைமுக அபிவிருத்திக்கு ரூபா 130 கோடி கடனுதவி

((கொழும்பு)

வடக்கு கிழக்கு உட்பட நாட்டின் பல பகுதிகளிலுமுள்ள கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இதற்கென ஆசிய அபிவிருத்தி வங்கி 130 கோடி ரூபாவை இலங்கைக்குக் கடனாக வழங்கும்.

இந்தத் திட்டத்துக்கான ஆய்வு வேலைகளைமேற்கொள்ள ஆசிய அபிவிருத்தி வங்கியின் தூதுக்குழு ஒன்று விரைவில் இலங்கைக்கு விஜயம் செய்யும்.

## பாடசாலை மாணவர்க்கு தேசிய அடையாள அட்டை

(கொழும்பு)

பதினறு வயது அடைந்த மாணவர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளை தமது பாடசாலைகள் மூலமாகப்பெற்றுக்கொள்ள முடியும்.

இந்தத் திட்டத்தை இந்த மாதம் முதல் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப் பட்டிருப்பதாக ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளர் பந்துல குலதுங்க தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து அவர்களின் புகைப்படங்களுடன் அவற்றை ஆட்பதிவுத் திணைக்களத்திடம் சமர்ப்பிக்குமாறு பாடசாலை அதிபர்களை ஆணையாளர் கேட்டுள்ளார்,

இந்த மாணவர்களின் விண்ணப்பங்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படும், இவர்கள் பொதுப் பரீட்சைகளில் தோற்றுவதற்கு தேசிய அட்டைகள் தேவைப்படுவதே இதற்குக் காரணமாகும்.

இந்த விபரங்கள் அனைத்தையும் எதிர்வரும் அக்டோபர் மாதத்திற்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு கல்லூரி அதிபர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தத் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது தாமதமாகும் எனவும் எதிர்வரும் டிசம்பர் மாதம் பரீட்சைக்குத்தோற்ற இருக்கும் மாணவர்கள் அவர்களது தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்ளமுடியாது போய்விடும் எனவும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

## லங்கா சிமெந்து சம்பளம்

(யாழ்ப்பாணம்)

லங்கா சீமெந்து லிமிடெட் ஊழியர்களின் பெப்ரவரி 92, மார்ச் 92 ஆகிய இரண்டு மாதங்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் இன்று வியாழக்கிழமை சுன்னுகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வழங்கப்படும்.

## நெருப்புக் காய்ச்சல் சிறுமி மரணம்

(யாழ்ப்பாணம்]

ஒரு மாத காலமாக நெருப்புக்காய்ச்சல், மூளைக்காய்ச்சலின்ல் பீடிக்கப்பட்டு, யாழ். பொது மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தசிறுமி ஒருவர் நேற்று மரணமானர்,

யாழ், சச்சேரி-நல்லூர் வீதியைச் சேர்ந்த கல்லூரி மாணவியான செல்வி துஷாந்தினி பஞ்சாட்சரலிங்கம் (11வயது) என்பவரே மரணமானவராவார், [56)

## சுவர் இடிந்து வீழ்ந்து மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு வீட்டிலுள்ளோர் நித்திரையில இருந்தபோது, வீட்டுச் சுவர் இடிந்து வீழ்ந்ததில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமுற்ற நிலையில் யாழ். போதன வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கந்தர்மடம் புகையிரதப் பாதையைச் சேர்ந்த திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம் (43 வயது), செல்வி லிங்கேஸ்வரி சொர்ணலிங்கம்(16வயது) சொர்ணலிங்கம் சதீஸ்வரன் (12 வயது) ஆகியோரே சுவர் வீழ்ந்தபோது அகப்பட்டவர்களாவர். (56)

### புலிகளுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளார். இலங்கை தொடர்பான விசேட கட்டுரையில் சஞ்சிகை மேலும் தெரிவித்திருப்பதாவது:

இராணுவ நடவடிக்கைகள் மூலம் நிர்ப்பந்தம் ஏற்படுத்தி புலிகளை பேச்சுவார்த்தைக்கு கொண்டு வரவே அரசு முயற்சிப்பதாக எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கூறியுள்ளார்

இதேவேளை பேச்சுவார்த்தைக்கான எந்த முயற்சியையும் இராணுவம் எதிர்க்கிறது என்பதும் தெரிகிறது.

பேச்சுவார்த்தை என்ற யோசனையே 'நம்பிக்கைத் துரோகம்' என்று புத்த மகா சங்கத்தின் பொதுச்செயலர் வண. வல்பொலராகுலதேரர் கூறியுள்ளார். (சி)

### பாதயாத்திரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாளர் மகிந்த ராஜபக்ஸ நேற்று தெரிவித்தார்.

பாதயாத்திரை நேற்று கதிர்காமத்தில் முடிவடைந்தது. பல்லாயிரக் கணக்கான மக்கள் இதில் பங்குபற்றியதாக தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து கதிர்காமத்தில் பொதுக் கூட்டமும் நடைபெற்றதாக கூறப்படுகிறது. (மா)

### இல. மத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றஞ் சாட்டப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து இவர் மேற்படி பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டிய சூழ்நிலைக்கு உள்ளாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

### 94 நோயாளர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்திய சாலையில் சிகிச்சை பெறும் பொருட்டு இன்று காலை புறப்பட்டுச் செல்கின்றனர்.

இவர்கட்கு உதவியாக தாதிகள், வைத்தியர்களும் கூடச் செல்கின்றனர். (56)

### பரீட்சை

(1ம் பக்கத் தொடர்ச்சி

புலிகள் தாக்குதல் நடத்தினல், படையினரும் திருப்பித் தாக்குவார்கள் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இப்பரீட்சை ஒரு மாதம் வரை நடைபெற இருப்பது தெரிந்ததே. [சி-மா]

### முல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சள் பீரங்கிப் படகுகள் மீது திடீர் தாக்குதல் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவும், அவர்களுக்கு பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் இராணுவ தரப்பினர் பெரும் பிரசாரத்தை அறிவித்த ஒரு சிலமணி நேரத்தில் இந்த அதிர்ச்சித் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளது.

இதனல் படையினருக்குப் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## போபஸ் ஊழல் ராவுக்கு பெரும் நெருக்கடி

(புதுடில்லி)

1986ம் ஆண்டு இடம்பெற்ற போபஸ் பீரங்கி வர்த்தகத்தில் சுமார் 150 கோடி ரூபா இலஞ்சம்பெற்ற இந்திய அரசியல்வாதியின் பெயரை வெளியிடுமாறு இந்திய எதிர்க் கட்சிகளும் பத்திரிகைகளும் இந்திய பிரதமர் நரசிம்மராவிற்கு பெரும் நெருக்கடி சொடுத்து வருகின்றன.

1986ம் ஆண்டு ராஜீவ் காந்தி பிரதமராக இருந்தபோது இந்த ஊழல் நடந்திருப்பதால் அப்போதைய அரசுக்கு நெருக்கமான அரசியல் தலைவர்கள் இலஞ்சம் பெற்றிருக்கவேண்டும் எனப் படுகிறது.

பிரதமர் நரசிம்மராவ் உண்மையை மூடிமறைத்தால் நாட்டின் பெருமையும் புகழும் கெட்டுவிடுமென பாரதீய ஜனதா கட்சியின் தலைவர் எல். கே. அத்வாணிதெரிவித்துள்ளார்.

மேலும் இலஞ்சம் வாங்கிய குற்றவாளிகளின பெயரை அரசுவெளியிட மறுத்தால் இலஞ்ச பேர்வழிகளை பிரதமர் நரசிம்மராவ் பாதுகாப்பது போல் ஆகுமென இந்திரா காங்கிரஸ் எம். பி.க்கள் பலர் கருத்து தெரிவித்துள்ளதாக கூறப்படுகிறது, (பா)

## தமிழக எம்.பி.க்கு மிரட்டல் ஐவர் கைதாகினர்

(சென்னை)

தமிழ்நாடு நிலக்கோட்டைப் பகுதி சட்டப்பேரவை உறுப்பினர் திருமதி பொன்னம்மாளின் வீட்டை வெடிகுண்டு வைத்து தகர்க்க திட்டமிட்டதாக மதுரையில் 5 பேர் கைதானர்கள்.

தனது வீட்டை குண்டு வைத்து தகர்க்க சதி செய்யப்படுவதாக திருமதி பொன்னம்மாள் சில தினங்களுக்கு முன்னல் சட்டப்பேரவையில் முறையிட்டதை அடுத்து முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா பொலிசாருக்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பித்தார். இதனையடுத்தே இந்த 5 பேரும் பொலிசாரினல் கைதாகினர். (கே)

## திருமலையில் தொடரும் சிங்கள குடியேற்றம்

[திருமலை]

திருமலை மாவட்டத்தின் 6 தமிழ்க்கிராமங்களில் திட்டமிட்ட ரீதியில் சிங்களவரை குடியேற்றும் நடவடிக்கையில் ஸ்ரீலங்கா அரசு ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

பாலம்போட்டாறு, இருல்குடி, உப்பாறு, ஆலங்கேணி, கன்னியா, ஈச்சந்தீவு ஆகிய தமிழ்க் கிராமங்களிலேயே இவ்வாறு சிங்களவர் திட்டமிட்ட ரீதியில் குடியேற்றப் படுகின்றனராம்.

இப்பகுதிகளில் கடந்த வருடமே இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தமிழர்களின் வீடுகள் இராணுவத்தினரால் சூறையாடப்பட்டதுடன், இந்து ஆலயங்களும் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டதுடன் இப்பகுதியில் புதிதாக பௌத்த விகாரைகள் கட்டப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

திருமலை மாவட்ட அரச அதிபரின் அனுசரணையுடனும் உதவி அரச அதிபர்களின் ஆதரவுடனும் குடியேற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க]

### தங்கப்பாளங்களை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை இரவு கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கைது செய்தனர்.

இந்த தங்கப் பாளங்கள் வீடியோ பற்றரிப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

இவருக்கு 55 லட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் இந்த அபராதத் தொகையை செலுத்தத்தவறியதால் அவர் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டார்-

### பஞ்சாப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சீக்கிய தீவிரவாதிகளே மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இக்குண்டு வெடிப்பில் படுகாயமடைந்த சுப்பிரிண்டனின் மனைவி ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளர். [க-சி]

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post office Sri Lanka under Licence Number B/10336/81.